'B' Section 10½

<u>சுருக்கம்</u>

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் இளநிலை உதவியாளர் / காசாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 ஆகிய பணியிடங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் 20 விழுக்காடு காலிப்பணியிடங்களில் தகுதிவாய்ந்த ஊராட்சி செயலர்களையும், 10 விழுக்காடு காலிப்பணியிடங்களில் ஊராட்சி ஒன்றிய பதிவுரு எழுத்தர் / அலுவலக உதவியாளர் / இரவுக்காவலர் போன்றவர்களையும் பணிமாற்றல் முறையில் பணியமர்த்துதல் – நிபந்தனைகளும், நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன – நிபந்தனை திருத்தியமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ7) துறை</u>

அரசாணை (நிலை) எண்.58 நாள் 26.05.2014

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.963, ஊரக வளர்ச்சி (இ7) துறை, நாள் 28.11.1990
2. அரசாணை (நிலை) எண்.964, ஊரக வளர்ச்சி (இ7) துறை, நாள் 28.11.1990
3. அரசாணை (நிலை) எண்.43, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, நாள் 15.02.1994.
4. அரசாணை (நிலை) எண்.20, ஊரக வளர்ச்சி (இ7) துறை, நாள் 25.01.2008.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.78234/2013/பி3, நாள் 08.11.2013.

******

<u>ஆணை:</u>

தமிழ்நாடு அமைச்சுப் பணியில் ஊரக வளர்ச்சி அலகில் ஒவ்வொரு ஆண்டும் இளநிலை உதவியாளர் / காசாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 மற்றும் காசாளர் பணியிடங்களில் 10 விழுக்காடு காலிப்பணியிடங்களில் அரசுப்பிரிவு பதிவுரு எழுத்தர்களுடன் ஊராட்சி ஒன்றிய பதிவுரு எழுத்தர்களையும் பணிமாற்றல் முறையில் பணியமர்த்துவதற்கு கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகளும் வழிமுறைகளும் படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் வெளியிடப்பட்டன.

2) படிக்கப்பட்ட அரசாணை இரண்டில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், ஊரக வளர்ச்சி அலகுகளில் ஒவ்வொரு ஆண்டும் இளநிலை உதவியாளர் / காசாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 ஆகிய பதவிகளில் ஏற்படும் 10 விழுக்காடு காலிப்பணியிடங்களில், ஊராட்சி முழுநேர/ பகுதிநேர எழுத்தர்களை பணியமர்த்தவும், அவ்வாறு பணியமர்த்துவதற்கு கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளும் நிபந்தனைகளும் வெளியிடப்பட்டன. பின்னர், நீதிமன்ற ஆணைகளின் அடிப்படையில், அரசுத் துறைகளில் அமைச்சுப் பணியில் பணிமாற்றல் முறையில் பணியமர்த்தப்படும் பொழுது கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகள் குறித்து திருத்திய ஆணைகள் மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டன.

(த.பி.பா)

3) பார்வை ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில் பிற நிபந்தனைகளுடன் பத்தி 5-ல் ஒவ்வொரு ஆண்டும் தகுதியான நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தேர்ந்தோர் பட்டியல் தயாரிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கீழ்க்கண்ட அலுவலர்கள் மாவட்ட குழுவில் (District Committee) இடம்பெற வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| i) | மாவட்ட ஆட்சித் தலைவர் | : | தலைவர் |
| ii) | மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) | : | உறுப்பினர் |
| iii) | மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பேரூராட்சி) | : | உறுப்பினர் |

4) பார்வை 4-ல் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், ஊரக வளர்ச்சி அலகுகளில் ஒவ்வொரு ஆண்டும் இளநிலை உதவியாளர் / காசாளர் / ஊர்நல அலுவலர் நிலை-2 ஆகிய பதவிகளில் ஏற்படும் 10 விழுக்காடு காலிப்பணியிடங்களில், ஊராட்சி முழுநேர / பகுதிநேர எழுத்தர்களை பணியமர்த்தபடுவதை, 20 விழுக்காடாக உயர்த்தி, அந்த 20 விழுக்காடு காலிப்பணியிடங்களில் ஊராட்சி உதவியாளர்கள்/பகுதி நேர ஊராட்சி எழுத்தர்கள் பணியமர்த்தப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டது.

5) பார்வை 5-ல் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் ஏற்படும் காலிப்பணியிடங்களில், (இளநிலை உதவியாளர் / காசாளர் / ஊர்நல அலுவலர் நிலை-2) இத்துறையின் பணியாளர்களைக் கொண்டு நிரப்பிட வேறொரு துறையின் அலுவலரான உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) அவர்கள் மாவட்ட குழு உறுப்பினர் என்ற நிலையில் அவரிடம் ஒப்புதல்பெறப்பட வேண்டியுள்ளதால், அவர் தம் துறையில் பணிநிமித்தம் காரணமாக ஏற்படும் இடர்பாடுகளை களையும் பொருட்டு மாவட்டக்குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினரான மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பேரூராட்சிகள்) தற்பொழுது உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) அவர்களுக்கு பதிலாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அதே பதவி நிலையில் இருக்கும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களை மாவட்டக்குழு உறுப்பினராக இடம்பெற செய்ய அரசாணை(நிலை) எண்.963 மற்றும் 964, ஊரக வளர்ச்சி (ப.அ7) துறை, நாள் 28.11.1990-ன் பத்தி எண்.5-ற்கு திருத்தம் வழங்கி உரிய ஆணையினை வழங்குமாறு கோரியுள்ளார்.

6) பார்வை 1 மற்றும் 2-ல் படிக்கப்பட்ட அரசாணைகள் வெளியிட்டபோது, தேர்ந்தோர் பட்டியல் தயாரிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான மாவட்ட குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பேரூராட்சிகள்) பதவி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால், தற்போது உதவி இயக்குநர்

(த.பி.பா)

(பேரூராட்சிகள்) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது என்பதையும், மாவட்ட குழு உறுப்பினராக உள்ள உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) அவர்களை மாவட்ட குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் குறிப்பிட்ட காலத்தில் ஒருங்கிணைக்கும் பொருட்டு அழைப்பு விடுவிக்கும் காலத்தில், அவர் தம் துறையின் வேலை நிமித்தம் காரணமாக கலந்து கொள்ள இயலாமல் போவதால், ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் காலிப்பணியிடங்கள் அந்தந்த ஆண்டிற்குள்ளாகவே நிரப்பப்பட வேண்டும் என அரசால் தெரிவிக்கப்படும் விதிமுறைகளை பின்பற்ற இயலாத நிலை ஏற்படுகிறது என்பதையும் கருத்தில் கொண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, பார்வை 1 மற்றும் 2–ல் படிக்கப்பட்ட அரசாணைகளில், பத்தி 5–ல் குறிப்பிட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இடம் பெற்றுள்ள மாவட்டக் குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினரான மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பேரூராட்சிகள்), தற்பொழுது நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) அவர்களுக்கு பதிலாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அதே பதவி நிலையில் இருக்கும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களை மாவட்டக் குழு உறுப்பினராக இடம் பெறச் செய்ய திருத்தம் வெளியிடலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (சென்னை நீங்கலாக)
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3
மாநில கணக்காயர், சென்னை–18/35.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, சென்னை–108.
இயக்குநர், கருவூலகங்கள் மற்றும் கணக்குகள் துறை, சென்னை–15.
<u>நகல்</u>
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு/உதிரி நகல்கள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

N. Rajini
பிரிவு அலுவலர்.
06/06/14.